தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
5.9.2024 (வியாழக்கிழமை)




கண்தானத்தை வலியுறுத்தி பேரணியாக வந்த மாணவர்களை படத்தில் காணலாம்.

## கண் தானத்தை வலியுறுத்தி

# கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு பேரணி

காரைக்கால், செப்.5-

கண் தானத்தை வலியுறுத்தி கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு பேரணி நடத்தினர்.

### மாணவர்கள் பேரணி

உலக கண் தானவிழா கடந்த ஆகஸ்டு 25-ந்தேதி முதல் செப்டம்பர் 8-ந்தேதி வரை காரைக்கால் மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக, கண்.தானத்தின் முக்கியத்துவத்தை பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் காரைக்கால் ஜிப்மர் மருத்துவமனை வளாகத்தில் இருந்து மாணவ-மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடந்தது.

இதில் காரைக்கால் ஜிப்மர் மருத்துவக்கல்லூரி, அன்னை தெரசா அரசு செவிலியர் கல்லூரி மாணவ-மாணவிகள் திரளானவர்கள் கலந்து கொண்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்றனர்.

### பொதுமக்களுக்கு விழிப்புணர்வு

மேலும் கண் தானம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

இறுதியாக மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் பேரணி முடிந்தது. அங்கு கலெக்டர் மணிகண்டன், கண் தானத்தின் அவசியம் குறித்தும், அதன் முக்கியத்துவம் குறித்தும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் ஜிப்மர் டீன் டாக்டர் சாகா மற்றும் டாக்டர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.